உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 08 புதன்கிழமை (25.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 329

# சர்வதேச சமூகத்தை நம்பியே பேச்சுக்குச் செல்கின்றோம்!

## அரசு நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் என்பதில் துளியும் நம்பிக்கை இல்லை என்கிறார் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, ஒக்ரோபர் 25

ஜெனிவாப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் எதுவும் தீர்மானிக்கப்படவில்லை. எனினும், எமது மக்களின் அவலங்களும், அவர்களது மனிதாபிமானப் பிரச்சினைகளும்தான் பேச்சுகளில் முக்கிய விடயங்களாக இருக்கும். சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சமாதான முயற்சிகளை முன்னகர்த்திச் செல்லச் சாத்தியமான சூழலை உருவாக்குவதே பேச்சு மேசையில் எங்களுடைய வலியுறுத்தலாக இருக்கும்.

விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவுக்குத் தலைமை வகித்துச் செல்லும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நேற்று கிளிநொச்சியிலிருந்து புறப்படுவதற்குச் சற்றுமுன் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

எமது மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளில் அரசுத் தரப்பு நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் என்பதில் எமக்குச் சிறிதளவும் நம்பிக்கை இல்லை. எனினும், சர்வதேச சமூகத்தை நம்பி - அவர்களின் அழைப்பை ஏற்றே - நாங்கள் பேச்சுக்குச் செல்கின்றோம் என்றும் தமிழ்ச்செல்வன் அங்கு தெரிவித்தார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் 2,500 கிலோ உணவுப்பொருள்கள்

கொழும்பு, ஒக். 25

யாழ்ப்பாணத்துக்கு இரண்டாயிரத்து 500 கிலோ அத்தியாவசிய உணவுப் பொருள்கள் நேற்று விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன என்று பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து பலாலிக்கு இந்தப் பொருள்கள் நேற்றுக்காலை எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

இதேவேளை-

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியப் பொருள்கள் பலவும் அறவே கிடைக்காத காரணத்தால் மக்கள் பெரும் பாதிப்புக்குட்பட்டிருக்கின்றனர்.

விலைகள் விண்ணைத்தொடும் அளவுக்கு உயர்ந்திருப்பதால் மக்கள் பட்டினியை எதிர்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இந்த நிலை தொடர்ந்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பேச்சுக்குழு ஜெனிவா புறப்பட்டது!

### நோர்வேயுடன் இணைத்தலைமையும் பயணப் பாதுகாப்புக்கு உத்தரவாதம்

கிளிநொச்சி, ஒக். 25

ஜெனிவாப் பேச்சில் கலந்துகொள்ளவிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சியில் இருந்து தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் செல்லும் இக்குழுவில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் எஸ்.புலித்தேவன், புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன், மகளிர் அரசியல்

(8ஆம் பக்கம் பார்க்க)



நோர்வேத் தூதரை கைலாகு கொடுத்து தமிழ்ச்செல்வன் வரவேற்றபோது...

## புலிகளின் பேச்சுக் குழுவில் இரா.உருத்திரகுமாரன்

கொழும்பு, ஒக்.25

ஜெனிவாவில் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் இரா. உருத்திரகுமாரனும் பங்குபற்றுவார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவுடன் இவரும் பேச்சில் கலந்து கொள்வார் என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம் சுகயீனம் காரணமாக இந்தப் பேச்சில் கலந்துகொள்ளவில்லை என்பது தெரிந்ததே. (அ-1)

## அரசுப் பிரதிநிதிகளும் இன்று பயணம்

கொழும்பு, ஒக்.25

ஜெனிவா பேச்சில் கலந்துகொள்ளவுள்ள அரசுப் பிரதிநிதிகள் குழு, இன்று கொழும்பில் இருந்து பயணமாகவுள்ளது.

அரச சமாதானக் குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான அரச குழுவினர் இன்று ஜெனிவாவிற்குப் புறப்பட்டுச் செல்வர்.

அமைச்சர்கள் ஜெயராஜ் பெர்னண்டோ புள்ளே, ரோஹித போகொல்லாகம, பேரியல் அஷ்ரப், பாதுகாப்பு அமைச்சின் செய

(8ஆம் பக்கம் பார்க்க)

## நவிண்டில் பகுதியில் கிளைமோர் தாக்குதல்

கரவெட்டி, ஒக்.25

வடமராட்சி, நவிண்டில் பகுதியில் நேற்றுக் காலை 8.15 மணியளவில் நடத்தப்பட்ட ஒரு கிளைமோர் தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார், மற்றொருவர் காயமடைந்தார் என்று கூறப்படுகிறது.

நவிண்டில் டேவிற் இராணுவ முகாமுக்கு அண்மையில் படையினர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

தாக்குதலில் சிக்கி கண்ணிலும், தோளி

(8ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே....

எதிர் வரும் நவம்பர் மாதம் நான்காம் திகதி நடைபெறவுள்ள ஆண்டு 5 புலமை விசேட பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் உள்ளே.

ஏனைய விசேட மாதிரி வினாத்தாள்கள் எதிர்வரும் 29.10.2006 மற்றும் 01.11.2006 ஆம் திகதிகளில் உதயனில் வெளியாகும்.

## வன்னி உட்பட வடக்கு - கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால்!

கொழும்பு, ஒக்.25

வடக்கு - கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரி இன்று வடக்கு - கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்துள்ளது.

வன்னி உட்பட வடக்கு - கிழக்கில் சகல பகுதிகளும் இன்றைய ஹர்த்தாலினால் முற்றாக ஸ்தம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1988 ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி, வடக்கு - கிழக்கு தற்காலிகமாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் இணைக்கப்பட்டது. இதை நிரந்தரமாக இணைக்க கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவும் அப்போது தீர்மானிக்கப்பட்டது. இருந்தும் இந்த சர்வஜன வாக்கெடுப்பு கடந்த 18 வருடங்களாகப் பதவிக்கு வந்த ஜனாதிபதிகளினால் பிற்போடப்பட்டு வந்தது.

இந்த நிலையில், வடக்கு - கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது என ஒக்ரோபர் 16 ஆம் திகதி, உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது தெரிந்ததே.

மீண்டும் வடக்கு - கிழக்கை இணைக்க நடவடிக்கை எடுக்க அரசை வலியுறுத்தும் வகையிலேயே வன்னி உட்பட வடக்கு -

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகளில் இருந்தவாறே உணர்வுகளை வெளிப்படுத்துங்கள்

### மாவட்ட எம்.பிக்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்.25

வடக்கு - கிழக்கில் இன்று நடைபெற ஏற்பாடாகி உள்ள ஹர்த்தாலில் குடாநாட்டு மக்களை உணர்வுபூர்வமாகப் பங்கேற்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுள்ளனர்.

அமைதியான முறையில் வீடுகளில் இருந்தவாறே உணர்வுகளை வெளிப்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா விடுத்த அறிக்கை ஒன்றில் கோரியுள்ளார்.

அரச அதிகாரிகள், வர்த்தகர்கள், கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் சகல மக்களும் ஹர்த்தால் பூரண வெற்றி பெறுவதற்கு அதில் பங்கேற்க வேண்டும்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மீதான தாக்குதல்; சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு, ஒக்.25

தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' இராணுவ நிலையல்ல. அதன்மீது வான் குண்டுத் தாக்குதல் நடத்தியமை கண்டனத்துக்குரியது என்று சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் வடக்குப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' மீது ஸ்ரீலங்கா விமானப்படையினர் கடந்த ஒக்டோபர் 17ஆம் திகதி குண்டுத் தாக்குதல் நடத்தியமைக்கு சர்வதேச ஊடகவியலாளர்கள் கூட்டமைப்புக் கண்டனம் தெரிவிக்கிறது.

இந்தத் தாக்குதலில் புலிகளின் குரல் வானொலியின் ஒலிபரப்புக் கோபுரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இரு பணியாளர்கள் காயமடைந்துள்ளனர் என்று எமது சர்வதேச ஊடகவியலாளர்கள் கூட்டமைப்புடன் இணைந்துள்ள சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து ஊடகங்களும் போர் இலக்குகள் அல்லாதவைகளாகக் கருதப்படவேண்டும்.

'புலிகளின் குரல்' மீதான குண்டுத் தாக்குதலுக்கு நாம் வன்மையாக பகிரங்கமாக குற்றம்சாட்டுகிறோம் என்று சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் தலைவர் கிறிஸ்டோபர் வாரென் தெரிவித்துள்ளார்.

''ஊடக நிறுவனம் மீதான தாக்குதலானது எதுவித சந்தேகத்துக்குமின்றி கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்குதல் மற்றும் சர்வதேச விதிகளை பாரதூரமாக மீறியமையே'' என்றும் வாரென் கூறியுள்ளார்.

'புலிகளின் குரல்' வானொலியில் பணிபுரியும் ஊடகவியலாளர்கள் ஆயுதமேந்தாத பொதுமக்கள். இந்த நிலையில் எந்தச் சூழ்நிலையிலும் அதனை இராணுவ நிலைகளாகக் கருதக் கூடாது'' என்றார் அவர்.

''ஊடகங்களை அமைதிப்படுத்துவதற்கான வன்முறை முயற்சிகளால் ஊடக பணியாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இலங்கையில் மீண்டும் ஊடக நிறுவனங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதற்கான கொடூரமான முன்னுதாரணமாக இது அமைத்துவிடக்கூடாது என்று சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு மிகவும் நம்பிக்கை கொள்கிறது'' என்று சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

''ஸ்ரீலங்கா அரசோ தமிழீழ விடுதலைப் புலிகளோ ஊடக நிறுவனங்கள் மீது குண்டுத்தாக்குதல் நடத்துவது பொறுப்பற்றதாகும். இலங்கையில் ஊடக சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் அது மேலும் சீர்குலைத்துவிடும்'' என்று வாரென் கூறியுள்ளார்.

## தென்மராட்சியில் பங்கீட்டு அட்டை மீளாய்வு

தென்மராட்சி, ஒக்.25

தென்மராட்சி பிரதேச குடியிருப்பாளர்களின் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர் அலுவலகங்களினால் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டுகின்றன. அதன்பொருட்டு குடியிருப்பாளர்களைத் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் பங்கீட்டு அட்டையுடன் வருகை தருமாறு கிராம அலுவலர்கள் கேட்டுள்ளனர்.

சாவகச்சேரி கோவில் குடியிருப்பு (ஜே / 301) பிரிவைச் சேர்ந்த குடியிருப்பாளர்களின் பங்கீட்டு அட்டைகள் இன்றும் நாளையும் மீளாய்வு செய்யப்படும் என கிராம அலுவலர் க. செல்வராசா தெரிவித்துள்ளார்.

## வவுனியா பூந்தோட்டம் பகுதியில் லொறிச்சாரதி சுட்டுக்கொலை

வவுனியா, ஒக். 25

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் லொறிச்சாரதி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலலப்பட்டிருக்கின்றார்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் மற்றுமொருவர் காயமடைந்தார். நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சிம்பொன் நிறுவனத்தில் பணியாற்றுபவரான காலியைச் சேர்ந்த பிரபாத் ஜெயசிங்க (வயது-28) என்பவரே இச்சம்பவத்தில் சுட்டுக்கொல்லப்பட்டவராவார். (த)

## நேற்றைய நோன்புப் பெருநாளை ஒட்டி முஸ்லிம் மக்களுக்கு அரிசி அன்பளிப்பு

நல்லூர், ஒக்.24

மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகம் நோன்புப் பெருநாளை முன்னிட்டு முஸ்லிம் மக்களுக்கு நேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெற்ற நோன்புத் தொழுகையின் பின் அன்பளிப்பாக அரிசி வழங்கியது.

பள்ளிவாசல் நிர்வாகக் குழுவின் தலைவர் எம்.எல்.லாபிர் மீள் குடியேற்ற அமைச்சர் றிசாட்பதியுதீனுடன் தொடர்பு கொண்டதை அடுத்து அமைச்சர் பதியுதீன் நோன்புப் பெருநாளை முன்னிட்டு முஸ்லிம் மக்களுக்கு அரிசி விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

64 முஸ்லிம் குடும்பங்களுக்கும் தனிப்பட்டவர்களான 110 முஸ்லிம் மக்களுமாக 174 பேருக்கு ஜும்மா பள்ளிவாசலில் வைத்து இவை வழங்கப்பட்டன.

பள்ளி வாசல் நிர்வாகி பி.எஸ்.எம்.சரபுல் அனம் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் எம்.ஆ.எம்.ஜிப்றில், மௌலவி ஜிர்பான், கே.எம் நஸ்ரின், என்.எம்.அஸ்மிலர், ஏ.ஆர் தகூர், என்.சி.ஜனுன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குறிப்பிட்ட பொருள்களை வழங்க உதவியளித்த அமைச்சர் றிசாட் பதியுதீன், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கே. கணேஸ், செயலக திட்டப் பணிப்பாளர் மகேஸ்வரன் ஆகியோருக்கு பள்ளிவாசல் நிர்வாகி சரபுல் அனம் நன்றி தெரிவித்தார். (1-111)

(படம் 3ஆம் பக்கத்தில்)

## வவுனியாவில் வெடிகுண்டு மீட்பு

வவுனியா குட்செட் வீதியில் நேற்று முன்தினம் பாரிய வெடிகுண்டு ஒன்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தினருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்து தேடுதல் நடத்தப்பட்ட போது சுமார் 25 கிலோ கிராம் எடையுள்ள பாரிய குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இந்தச் சம்பவம் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-312)

## பத்திரிகையாளர் சிவானந்தம் காலமானார்

யாழ்ப்பாணம்,ஒக்.25

ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியும் 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றியவருமான மு.சிவானந்தம் காலமானார்.

இந்தியாவில் பயின்று தமது முதுகலை மாணிப்பட்டத்தைப் பெற்ற அவர் சிறந்த இலக்கியப் பேச்சாளரும், எழுத்தாளரும் ஆவார்.

ஆசிரியராகப் பணியை ஆரம்பித்த சிவானந்தம் பின்னர் அதிபராகவும் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் தரம் உயர்ந்தார். அவர் முன்னிப்பளை வித்தியானந்தாக் கல்லூரியின் அதிபராக பணிபுரிந்த வேளை அவரது சேவையால் அக்கல்லூரி சிறப்பான வளர்ச்சி கண்டது.

1987 காலப் பகுதியில் ஈழநாடு பத்திரிகை அலுவலகம் தாக்குதலுக்கான பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போது மு.சிவானந்தம் அதன் ஆசிரியர் பொறுப்பை ஏற்று நடத்தினார்.

அதற்கு முன்னர் அவர் உதயனின் வார இதழ் சஞ்சீவியில் இலக்கியக் கட்டுரைகளும், பத்தியும் எழுதி வந்தார். சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஆவார். இறு திக்கிரியைகள் நேற்று நடைபெற்றன. (அ-ப)

## ஓராண்டு நினைவு தின அழைப்பு



கடந்த 05.11.2005 இல் சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### பொன்னையா தருமராசா

அவர்களின் ஓராண்டு நினைவுதின நிகழ்வுகள் நாளை (25.10.2006) புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இவ் வைபவத்திற்கு தாங்களும் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

723, மானிப்பாய் வீதி,
ஆலடிச்சந்தி, ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(54643)

## 31 ஆம் நாள் நினைவுநாள்

எமது பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமைபுரியும் திருமதி கருணாவதியின்

பாசமிகு தந்தை

### அமரர் முருகர் செல்லபாக்கியம்

அவர்களது மறைவையிட்டு அன்னாரது மறைவின் 31 ஆம் நாளான இன்று அவரை நினைவு கூருவதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

பருத்தித்துறை பிரதேச செயலாளரும்,
நலன்புரிச் சங்க உத்தியோகத்தர்களும்.

(54640)

## கண்ணீர்அஞ்சலி



எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ந.விவேகானந்தராஜாவின்
அன்புப் பாரியார்

### திருமதி விவேகானந்தராஜா கமலமனோகரி

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை
அபிவிருத்திச்சங்கம்.

(சி-51217)

## கண்ணீர்அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கலைவாணி அருள்மாறனின்
அன்புத் தந்தை

### முத்துச்சாமிப்பிள்ளை சிவானந்தம்

(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

குறிப்பிட்ட ஒரு தோளைப்பணம் பேர்ஸுடன் கோண்டாவிலில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெறுக் கொள்ளவும். தொடர்புகளுக்கு :

ANDRA பிறின்டேர்ஸ், உப்புமடச் சந்தி கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

## தவறிவிட்டது

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த யோகநாதன் யோகினி என்பவரது தேசிய அடையாள அட்டை (815061977V) மற்றும் விசேட அடையாள அட்டை பேர்ஸுடன் 20.10.2006 யாழ். நகர் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

சாரங்கன் நகைமாடம், இல 45, கஸ்தூரியார் வீதி.

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள NPJO XXX தொடரிலக்கமுடைய சிவப்பு நிற Scooty Pep உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
இல.75/A, கொவில் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### முத்துச்சாமிப்பிள்ளை சிவானந்தம்

(ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி - முன்னாள் ஆசிரியர் ஈழநாடு)

அரசடி வைரவர் கோயிலடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமிப்பிள்ளை சிவானந்தம் 23.10.2006 திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் புத்திரரும் செட்டிகுறிச்சியைச் சேர்ந்த காலஞ்சென்ற பரஞ்சோதி - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் குமாராம்பிகையின் பாசமிகு கணவரும் அன்பழகன் (கனடா), கலையழகி (ஆஸ்திரேலியா), கலையரசி (கனடா), ஞானவழகன் (ஜேர்மனி), கலைவாணி (ஆசிரியை, யா/ சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணவேணி, பாலகிருஷ்ணன், சிறீஸ்வரன், ஜனனி, அருள்மாறன் (பொது சுகாதார பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மாமனும் சச்சிதானந்தம், தில்லைநாதன், சுத்தானந்தம், குணரத்தினம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.10.2006) செவ்வாக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருள்மாறன் (மருமகன்), மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

(சு 51210)

### கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும், குளமங்கால், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் நேற்று (24.10.2006) செவ்வாக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சுமதி (சுவிஸ்), சூரியகுமாரி, சந்திரகுமாரி, சசிக்குமார், சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேஸ், ரமேஸ்வரன், மதியழகன், சதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2006) புதன்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளமங்கால்,
மல்லாகம்.

தகவல்:
மதியழகன் (மதி)

### ஆறுமுகம் நிர்மலாநந்தன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பாரிஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நிர்மலாநந்தன் 23.10.2006 திங்கட்கிழமை பாரிஸில் காலமானார்.

அன்னார் ஆறுமுகம் (இளைப்பாறிய கிராம அலுவலர்) காலஞ்சென்ற சிவனேசமணி தம்பதியரின் அன்பு மகனும் சண்டிலிப்பாய் சீரணியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஏரம்பு - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் கலைவாணியின் அன்புக் கணவரும் பிறேமினி (கனடா), சிவானந்தகௌரி (ஜேர்மனி), பிறேமதர்சினி (கனடா), பிறேமாநந்தா, சர்வானந்தன் (பாரிஸ்),பாமினி, ஜெயானந்தன்(பாரிஸ்), சதானந்தன், லோஜினி (மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்), விமலானந்தன்,கிருஷ்ணானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பாரிஸ் நகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஆனந்த நிம்மதி'
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(54645)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலமர்வுகள்

தென்மராட்சி,ஒக்.25

யாழ். மாவட்டக் கல்வி வலயங்களின் அனைத்துப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கான செயலமர்வுகள் நாளை மறுதினம் வெள்ளியன்றும் சனிக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன. அடுத்தவருடம் தரம் 6,10 ஆகிய வகுப்புகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய பாட மாற்றம் தொடர்பாகவே இச்செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

கொழும்பு தேசிய கல்வி நிறுவக தமிழ்ப் பிரிவுப் பணிப்பாளர் எஸ்.நவரத்தினம் செயலமர்வுகளை நடத்தவுள்ளார். அத்துடன் தமிழ்மொழி பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கும் செயலமர்வு நடத்தப்படவுள்ளன. (202)

## முன்பள்ளி மாணவர்களுக்கு அடுத்தவாரம் முதல் காலை உணவு

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிச் சிறார்களுக்கு அடுத்த வாரம் தொடக்கம் காலை உணவு வழங்கப்படவுள்ளது.


உலக உணவுத்திட்டத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட விருக்கிறது. இதற்கான உலர் உணவுப் பொருள்கள் கடந்த திங்கட்கிழமை அந்தந்த முன்பள்ளி ஆசிரியர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (202)

## சாவகச்சேரியில் கடத்தப்பட்ட ஓட்டோ மீட்கப்பட்டது

கடந்த வாரம் 18ஆம் திகதியன்று சாவகச்சேரியில் கடத்தப்பட்ட முச்சக்கரவண்டி சரசாலை பொம்பிக்குளம் மயானத்திற்கு அருகில் பற்றை மறைவில் இருந்து மீட்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான், சாவகச்சேரி பொலிஸார், படையினரின் பொறியியற் பிரிவினர் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று முச்சக்கரவண்டியை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. முச்சக்கரவண்டி எந்தவொரு பாதிப்பும் அற்ற நிலையிலும் அதன் பற்றரி மட்டும் இல்லாத நிலையிலும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த முச்சக்கரவண்டி அதன் சாரதியுடன் கடத்தப்பட்டதும், சாரதி காயங்களுடன் ஏற்கனவே மீட்கப்பட்டதும் தெரிந்ததே. (1)





நோன்புப் பெருநாளை முன்னிட்டு மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத்தினர் முஸ்லிம் மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்கினர். பள்ளிவாசல் பெருநாள் தொழுகை இடம்பெறுவதை முதலாவது படத்திலும் - பள்ளிவாசல் நிர்வாகி பி.எஸ்.எம்.சரபுல் அனம் ஒருவருக்கு அரிசிப் பொதி வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்:-லக்ஸ்மன்)*

# கல்வித்துறையாளர்கள் இலகு கடனில் கணனி கொள்வனவு செய்ய வசதி

அச்சுவேலி,ஒக்.25

கல்வித் துறையில் கடமை புரிபவர்களுக்கு இலகு கடன் கொடுப்பனவின் கீழ் கணனி கொள்வனவு செய்வதற்கான தேசிய வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு முன்வந்துள்ளது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் இலகு கடன் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் மேசையில் வைத்து பயன்படுத்தக் கூடிய சொந்தக் கணனி அல்லது இடத்திற்கிடம் எடுத்துச் செல்லக்கூடிய கையடக்கக் கணனி ஒன்றைக் கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும்.

கல்வித் துறையில் உள்ளவர்களுக்காக இலகு கொடுப்பனவின் கீழ் கணனிக் கொள்வனவிற்கு வசதிகளை செய்து கொடுக்கும் வேலைத் திட்டம் உத்தியோக பூர்வமாக ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் கல்வி அமைச்சினால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கணனிக் கொள்வனவு தேசிய வேலைத் திட்டத்தில் இணைந்து கணனியைக் கொள்வனவு செய்ய விரும்பும் கல்வித் துறை சார் ஊழியர்கள் தேசிய சேமிப்பு வங்கியுடனும் இந்த வேலைத் திட்டம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு இலகு கொடுப்பனவின் கீழ் கணனியை கொள்வனவு செய்துகொள்ளலாம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (1)

## கொடிகாமத்தில் அம்புலன்ஸ் தரிப்பிடம்

குருநகர்,ஒக்.25

கொடிகாமம் மத்திய மருந்தகத்தில் அம்புலன்ஸ் வாகனம் நிறுத்துவதற்கான தரிப்பிடம் ஒன்று அடுத்த வருடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கென சுமார் ஒன்பது லட்சம் ரூபா செலவில் நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ப-51)

**சிகிச்சைகள் பூர்த்தியாகியும்**

# 18 வெளிமாவட்ட நோயாளர் இன்னமும் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.25

வெளிமாவட்டங்களில் இருந்து ஓகஸ்ட் 11ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.போதனா வைத்தியசாலையிக்குச் சிகிச்சைக்கென வந்த நோயாளர்களில் 18 பேர் இன்னும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது உள்ளனர்.

இவர்களில் 5பேர் வைத்தியசாலையின் வார்டுகளிலும் ஏனையோர் நண்பர், உறவினர்களது வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இந்தத் தகவலை யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.இரத்தனசிங்கம் தெரிவித்தார்.

உறவினர், நண்பர்கள் வீடுகளில் இவர்கள் தங்கியுள்ளமையால் கப்பல் பயணப் பதிவுகளை வைத்தியசாலையூடாக மேற்கொள்ளத் தவறியுள்ளனர்.

வைத்தியசாலையின் ஊடாகப் பதிவுகளை மேற்கொண்ட 134 நோயாளர்களும் அவர்களது உதவியாளர்களுமாக 116 பேர் தமது சொந்த இடங்களுக்குக் கப்பல் மூலம் சென்றுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (203-11-88)

## மரவள்ளிக்கிழங்கு விலை உயர்வு

வடமராட்சி, ஒக்.25

வடமராட்சியில் மரவள்ளிக்கிழங்குக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதையடுத்து திடீரென மரவள்ளிக் கிழங்கின் விலை உயர்வடைந்துள்ளது.

தற்போது உணவுப்பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றமையால் மக்கள் உணவுக்காக அதிகம் மரவள்ளிக் கிழங்கை வாங்கி வருகின்றனர்.

இதன் காரணமாக 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த மரவள்ளிக் கிழங்கு 40 தொடக்கம் 50 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. (203-155-173)

## முன்பள்ளி ஆசிரியருக்கு இலவச உலர் உணவு

சுழிபுரம்,ஒக்.25

வலிகாமம் பிதேச சபை அலுவலகத்தில் வைத்து முன்பள்ளி ஆசிரியர்கள் எண்பது பேருக்கு இலவச உணவு வழங்கப்படவுள்ளது. இந்த இலவச உலர் உணவை குறித்த நேரத்தில் வந்து பெற்றுச் செல்லுமாறு பிரதேச சபை செயலாளர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அறிவித்துள்ளார்.

சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி, சங்கானை ஆகிய பகுதியிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த உலர் உணவு வழங்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. (ப-28)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

நயினாதீவு மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றினைப் பெற்ற

செல்வி பத்மநாதன் சுவர்ணலதா - 3ஏ
செல்வி கந்தசாமி சுஜாதா - 2ஏ, பி
செல்வி விக்கினேஸ்வரன் விஜயதீபா - ஏ, 2பி

ஆகியோரையும் ஏனைய உயர்பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்களையும் கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
நயினாதீவு மகாவித்தியாலயம்.
(54630)

**விற்பனைக்கு**

எமது சங்கத்தில் வெற்றுச் சாக்கு, வெற்று உரப்பை என்பன விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு 7.11.2006ஆம் திகதிக்கு பிந்தாது மூடிய கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும்.

வெற்றுச்சாக்கு - 5100
வெற்று உரப்பை - 5800

கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச் சாக்கு, வெற்று உரப்பைக்கான கூறுவிலை எனக் குறிப்பிடவும்.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(சி/51214)

**45ஆம் நாள் நினைவஞ்சலி**

மலர்வு 08 - 10 - 1951
உதிர்வு 10 - 09 - 2006



**இராமலிங்கம் பஞ்சாட்சரம்**
*(யா/மாநகர சபை ஊழியர்)*

காவியத் தலைவனாய் நீயிருந்து
கவர்ந்தாய் பல உள்ளங்களை
காற்றினிலே வரும் கீதமாய் ஒலிக்கிறது உன் குரல்
கடலலை போல் உங்கள் நினைவு
ஓயாமல் இதயமதில் நிலைக்கும்.

6, மணல்தறை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (54629)

உம்பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

**பிறந்த நாள் நினைவும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்**

மலர்வு 25 - 10 - 1929
மறைவு 25 - 09 - 2006



**கனகரத்தினம் கனகம்மா**

எங்கள் குடும்ப குல விளக்கே அம்மா!
அன்னையாய் தந்தையாய் அன்பையும் பண்பையும்
ஊட்டி வளர்த்தீர்களே!
அஜந்தன் அனுசா இலக்கியா எமில் சுதர்சன்
நிரோஜன் கௌரி அபிஷயா
என்னும் பிஞ்சுகள் அம்மம்மா என வாடி வதங்க
எங்கள் அம்மா என்ற ஆலமரம்
அடியோடு சாய்ந்து விட்டீர்களே!
மீண்டும் மனிதப் பிறவியாகி எங்கள்
அம்மா குஞ்சு எம் குழந்தையாக பிறக்க
இறைவனை வேண்டுகிறோம்.

எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.10.2006) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் இடம்பெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

*'கனகம்மா அகம்', ராசபாதை,*
*கல்வியங்காடு.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(54639)

**மரண அறிவித்தல்**



*திருநாவுக்கரசு பூமணி*

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா, பண்டாரிக்குளத்தில் வசித்தவருமாகிய திருநாவுக்கரசு பூமணி 22.10.2006 ஞாயிற்றுக் கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - திருமேனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு அவர்களின் அன்புத் துணைவியும் ஏகநாயகி (இந்தியா), காலஞ்சென்ற இந்திராணி, பாக்கியலட்சுமி (பாக்கியம்), ரதிதேவி, திருவருட்செல்வி, கிருஸ்ணகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற பேரம்பலம், சிவகுருநாதன், தேவராஜா, ஜெயராசன், செல்வரத்தினம், கலாயோகி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான பராசக்தி, பூரணம் மற்றும் திருநீலகண்டன் (கொழும்பு), காலஞ்சென்ற பொன்னுச்சாமி மற்றும் லிங்கபிள்ளை (கனடா), மகேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, இராசாத்தி, முத்துலிங்கம், சண்முகராசா மற்றும் ஆனந்தம், பரஞ்சோதி (இந்தியா), தவமலர் (ஆசிரியர் - ஹற்றன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.10.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*சரவணை கிழக்கு,*
*வேலணை.*
(54634)

தகவல்:
தேவராஜா பாக்கியலட்சுமி (மகள்)
த.இராசலிங்கம் (சகோதரன்).

**மல்ரி-ஒயில்-தேங்காய் எண்ணெய் ஆலை இணுவில்**

கொப்பறா, எங்களிடமுள்ள இயந்திரங்கள் மூலம் கூலிக்கு தேங்காய் எண்ணெய் வடித்துக் கொடுக்கப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இணுவில். T.P.:2226887 (54632)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12.08.2006இல் நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரீட்சை - 2006

## வினாத்தாள்

### வினாத்தாள் - I 2006

1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றில் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

01) பாடலில் விவரிக்கப்பட்டுள்ள பறவையைத் தெரிவுசெய்க.

உணவுக்காக பழங்களை உண்ணும், வானத்தில் வேகமாகச் செல்லும், உடல் பச்சை நிறமாய் இருக்கும் பறவை ஒன்று.





02) பாடலில் விவரிக்கப்பட்டுள்ள மலரைத் தெரிவு செய்க.

காலையில் சூரிய ஒளியில் மலரும், நீரில் இருக்கும், மாலையில் வாடும், மணம் வீசும், மனதைத் தொடும் மலர் ஒன்று.




03) தரப்பட்டுள்ள அடைப்புகளில் உள்ள உருக்களை பார்க்க ஒவ்வோர் உருவுக்கும் ஆங்கில எழுத்துகள் இடப்பட்டுள்ளன.




உதாரணத்தை அவதானித்து தொடர்பினை விளங்கிச் சரியான விடையைத் தெரிவு செய்க.

உதாரணம் A:G

1) B:E, C:H, D:E
2) B:H, C:F, D:E
3) B:H, C:E, D:F

பின்வரும் பாடலை வாசித்து 4ஆம், 5ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

கற்ற கல்வி ஒருவரின்
சிறந்த செல்வமாகும்
நல்ல பண்புகள் இருப்பின்
நாடு உங்களைப் போற்றும்

04) ஒருவரின் சொத்தாக விளங்குவது எது?

1) கற்ற கல்வி 2) நற்பண்புகள் 3) நற்பழக்கவழக்கங்கள்

05) நாடு உங்களைப் போற்ற வேண்டுமாயின் நீங்கள் யாது செய்யவேண்டும்?

1) சிறந்த கல்வி 2) நற்பண்புகளை விருத்தி செய்தல் 3) நன்நடத்தை

06) 'விளையும் பயிரை முளையில் தெரியும்' என்பதன் கருத்து?

1) பயிர் நன்றாக வளர நல்ல விதை தேவை.
2) ஒருவரின் சிறுவயதுப் பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம்.
3) பெரியவர்களாக வளர்வதற்குச் சிறியவர்களுக்கு உதவுதல் வேண்டும்.

07) கமலனும் நிசாமும் சிறுவயதுமுதல் ஒன்றாக வளர்ந்த இரு நண்பர்கள். அண்மையில் வகுப்பிற்கு புதிதாகச் சேர்ந்த நாதனுடனும் கமல் மிக நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியிருந்தான். இந் நிலையை நன்கு வெளிப்படுத்தும் கூற்றைத் தெரிவு செய்க.

1) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
2) கடுகு சிறிதானாலும் காரம் பெரிது
3) முன்னை வந்த செவியைவிட பின்னர் வந்த கொம்பு பெரிது


08) கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் கட்டடம் ஒன்றைக் கட்டத் திட்டமிடப்பட்டிருந்தது.

| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| 1 | 2 ஆண்டுகள் |
| 2 | படிமுறை 1 இன் இருமடங்கு |
| 3 | படிமுறை 1 இன் அரை மடங்கு |


2004ஆம் ஆண்டில் கட்டடம் கட்டத் தொடங்கப்பட்டுள்ளது எனின் எந்த ஆண்டில் அது கட்டி முடிக்கப்படும்?

1) 2010 2) 2011 3) 2012


09) கீழே தரப்பட்டுள்ள உரு இரண்டு கடதாசிக் கீற்றுக்களை மடித்து அமைக்கப்பட்டுள்ளது. அதனை அமைக்கப் பயன்படுத்திய இரண்டு கடதாசிக் கீற்றுக்களையும் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.





10) உருவைப் பார்க்க வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.





11) உருவில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக மடிக்கப்பட்ட கடதாசித் துண்டைச் சரியாக வெட்டவேண்டிய விதத்தைத் தெரிவுசெய்க.




12) அடைப்பினுள் உள்ள உருவைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.




பின்வரும் கோட்டுப் படங்களின் உதவியுடன் 13ஆம், 14ஆம் வினாக்களுக்கு விடைதருக.




13) மாம்பழங்கள் 3 இனதும் தோடம்பழங்கள் 5 இனதும் விலை யாது?

1) ரூபா 44 2) ரூபா 58 3) ரூபா 66

14) மாம்பழம் 1 இனதும் தோடம்பழம் 1 இனதும் விலை யாது?

1) ரூபா 11 2) ரூபா 14 3) ரூபா 18

★ மதன் ஆண்பிள்ளை ஆவான். மதன் அக்காவிற்கு இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.


15) மதனிற்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?

1) 3 2) 2 3) 1

16) மதனிற்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?

1) 2 2) 3 3) 4

★ மின் அலங்காரச் சரம் ஒன்றில் இருந்து மின்குமிழ்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளது.




17) இதற்கேற்ப மின் அலங்காரச் சரத்தில் எந்நிற மின்குமிழ் அதிக எண்ணிக்கையில் உள்ளன.

1) நீல நிற மின்குமிழ் 2) சிவப்புநிற மின்குமிழ் 3) பச்சைநிற மின்குமிழ்

18) மின் அலங்காரச் சரத்தில் ஒவ்வொரு நிறத்திலும் உள்ள மின்குமிழ்களின் எண்ணிக்கைகளை குறைந்த எண்ணிக்கையில் இருந்து கூடிய எண்ணிக்கைவரை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடை யாது?

1) நீலம், சிவப்பு, பச்சை 2) பச்சை, சிவப்பு, நீலம் 3) பச்சை, நீலம், சிவப்பு

★ பின்வரும் கோவையைப் பார்க்க

2*3 = 3#3

இங்கு = குறியீடானது சமனைக் கருதுகின்றது நியம கணிதச் செய்கைகளுக்காக இங்கு *# என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப

19) * என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

1) கூட்டல் 2) கழித்தல் 3) பெருக்கல்

20) # என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது?

1) கூட்டல் 2) கழித்தல் 3) வகுத்தல்

21) தாவீதுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் புதன்கிழமையும் விடுமுறை கிடைக்கும். அவரின் மனைவிக்கு ஒன்றுவிட்ட ஒருநாள் விடுமுறை கிடைக்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைத்துள்ளது. இவற்றிற்கு அமைய பின்வரும் கூற்றுகள் இடையே மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

1) அடுத்த ஞாயிற்றுக்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.
2) இன்னும் எட்டுநாள்களில் அவர்கள் இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.
3) அடுத்த வியாழக்கிழமை தாவீதின் மனைவிக்கு மட்டும் விடுமுறை கிடைக்கும்.


22) நான்கு மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 16 கிலோமீற்றர் தூரம் சென்றனர். ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதன் நடந்த தூரம் எவ்வளவு?

1) 1 கிலோமீற்றர் 2) 4 கிலோமீற்றர் 3) 5 கிலோமீற்றர்.

23) 4மீற்றர் நீளமும் 4 மீற்றர் உயரமும் உள்ள சுவருக்குப்பூச 2 லீற்றர் பூச்சு தேவைப்படுகின்றது. 8 மீற்றர் நீளமும் 1 மீற்றர் உயரமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்குப் பூச எத்தலை லீற்றர் பூச்சு தேவைப்படும்.

1) 1 லீற்றர் 2) 2 லீற்றர் 3) 4 லீற்றர்

24) முகம் பார்க்கும் கண்ணாடியில் கடிகாரம் தோன்றும் விதம் உருவில் காணப்படுகின்றது இக்கடிகாரத்தின் உண்மை நேரம் என்ன?



1) 2.55
2) 3.05
3) 9.05

★ பின்வரும் உரையாடலை வாசிக்க

தொலைபேசி மணி ஒலிக்கின்றது. வீட்டுச் சொந்தக்காரப் பெண் விடையளிக்கிறார்
ஹலோ!..... யார் பேசுகிறீர்கள்?
அண்ணன் பேசுகிறேன் ... எங்கள் மகன் இன்று காலை அங்கு வந்தானா?
இல்லை...... வரவில்லை ...... குமார் நேற்று கோவிலில் அண்ணனைச் சந்தித்ததாகக் கூறினான்
தங்கை ...... இப்போது குமார் வீட்டில் இருக்கிறானா?
இல்லை..... இன்று பிந்தி வருவதாகக் கூறினான். வேலை முடிந்து வரும்போது பெரியப்பாவைப் பார்க்கச் செல்வதாகக் கூறினான்..... இந்த நாள்களில் பெரியப்பா சுகயீனமுற்றிருக்கிறார்.
என்ன சுகவீனம்?
காச்சல் ..... ஒரு கிழமையாகிறது
குமார் வீட்டுக்கு வந்ததும் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு தருமாறு கூறுங்கள்
சரி ..... நல்லது இரவு ...... வந்தனம்

25) இந்தத் தொலைபேசி உரையாடலில் எத்தனை பேர் தொடர்புபட்டுள்ளனர்?

1) நான்கு பேர் 2) ஐந்து பேர் 3) ஆறு பேர்

26) இத்தொலைபேசி உரையாடலில் குறிப்பிடப்பட்டுள்ள நாளின் எந்தநேரத்தில் நடத்தப்பட்டுள்ளது.

1) காலை 10 மணியளவில் 2) பகல் 2 மணியளவில் 3) இரவு 7 மணியளவில்

★ பின்வரும் சொற்களை வாசிக்க. இதற்கேற்ப 27ஆம், 28ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

கல்லை..........*..........கண்டவன்
கண்ணைக் கவரும் சிற்பமாய்
கல்லை மாற்றி அமைத்தவன்
கண்ட மக்கள் ............#

27) * என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

1) சிற்பி 2) ஓவியன் 3) கவிஞன்

28) # என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

1) தூற்றினர் 2) போற்றினர் 3) எறிந்தனர்

29) முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நின்ற பெண் ஒருத்தி தனது உருவத்தைப் பார்த்துக் கூறிய பினவரும் கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்று யாதாக இருக்கலாம்?

1) இக் கண்ணாடியில் காணப்படுபவர் எனது தாயாரின் சகோதரியாவார்.
2) இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தாயாரின் சிற்றன்னையாவார்.
3) இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தாயாரின் ஒரே மகளாவார்.

30) முகம்பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நின்று கொண்ட ஒருவர் தனது உருவத்தைப் பார்த்துக் கூறிய கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்று யாதாக இருக்கலாம்.

1) இக் கண்ணாடி காட்டுபவரின் தந்தை எனது தந்தை
2) இக் கண்ணாடி காட்டுபவரின் தந்தை எனது சிறிய தந்தை
3) இக் கண்ணாடி காட்டுபவரின் தந்தை எனது மகனின் மாமன் ஆவார்.

★ 31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| | | |
|---|---|---|
| வித்து | திகதி | பதவி |
| தும்பு | தந்தி | புனித |


அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைப் புள்ளிக்கோடுகளின்மீது எழுதுக.

பதவி வித்து தும்பு .................... .................... ....................

32) பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரில் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் கருத்துள்ள சொற்களை அமைத்து இப் புதிரை நிரப்புக தரப்பட்டுள்ள உதவிக் கூற்றுகளைப் பயன்படுத்துக.

இடமிருந்து வலம்: 1) வெள்ளை நிறப்பறவை
2) அகத்திற்கு எதிரான

[illegible] 1) மிருகங்களுக்கு உண்டு
2) நீரை அள்ளலாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33) 1ஆம் 2ஆம் தராசுகளில் வைக்கப்பட்டுள்ள பொருள்களின் நிறைகளின் மொத்தத்தை அவதானிக்க மூன்றாம் தராசில் உள்ள பொருள்களின் நிறை எத்தனை கிலோகிராம்?




34) பின்வரும் பொருள்களின் விலைகளின் கூட்டுத்தொகையைப் பார்த்து புத்தகத்தின் விலையைக் காண்க.





புத்தகத்தின் விலை ....................


35) இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்டுள்ள இலக்கம் யாது?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 5 | 3 | 8 | 2 | 6 | 5 |
| 4 | 3 | 4 | 2 | 9 | 6 | 3 | 2 |

36) இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்டுள்ள வடிவம் யாது?




37) ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.




எழுத்து W இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது?

38) ஒரு சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.



இலக்கம் 6 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள இலக்கம் யாது?...........

★ நிமல், விமல், அமல் என்னும் மூவர் உடற்பயிற்சிக்காக நடந்து செல்லும் மூன்று பாதைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்கள் மூவரும் பயணத்தை ஆரம்பிக்கும் இடங்கள் A,B,C என்ற எழுத்துகளாலும் முடிவிடங்கள் X,Y,Z என்ற எழுத்துக்களாலும் குறிக்கப்படுகின்றன.




39) இம் மூவரிடையே எவர் மிக நீளமான பாதையில் பயணம் செய்கிறார்?...............

40) இம் மூவரும் தத்தம் பயணப் பாதையில் நடந்து செல்லும்போது அதிக தடவைகள் தமது இடப்பக்கமாகத் திரும்பியவர் யார்?...............

## வினாத்தாள் - II - 2006

1] கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசிக்க.

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

கன்றை நினைத் உள்ளம்
கசியும் பசுவைப்போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமம் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்

- வித்துவான் க.வேந்தனார் -

பாடல் அடிகளைக் கொண்டு (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1) அறம் என்ற கருத்தை தரும் சொல் ஒன்று எழுதுக ............................
2) தொண்டுகளில் பெரிது எனக் கவிஞர் கருதுவது எதனை? ............................
3) உள்ளம் கசிதல் என்பதன் பொருள் யாது? ............................
4) நாம் நினைத்தோம் என்பதை ஒருமையில் மாற்றி எழுதுக. ............................
5) தந்தை தாயைக் குறிக்கும் ஒரு சொல் எழுதுக. ............................
6) பசுவின் இளமைப் பெயர் யாது? ............................
7) இப்பாடலில் இடம்பெறும் உயர்திணைப் பெண்பாற் பெயர்ச்சொல் யாது? ............................
8) இங்கு இடம்பெறும் முன்னிலை பன்மை பெயர்ச்சொல்லை எழுதுக? ............................
9) கவிஞர் கன்றை யாருக்கு ஒப்பிடுகிறார்? ............................
10) பருவம் பார்த்துப் பயிர்செய்தல் என்ற கருத்தைத் தரும் பழமொழி ஒன்றை எழுதுக? ............................

2] சொற்களை பொருத்தமாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1) கதைகள்/பற்றிய/பலவற்றை/குளங்கள்/சேகரித்தான்/மோகன்
..........................................................................................
2) கடக்க/மஞ்சள்/பயன்படுத்துவோம்/கோட்டையே/எப்போதும்/பாதையை
..........................................................................................

3] பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.

1) சூரியனைக் கண்ட பனிபோல ............................................
2) கல்லின் மேல் எழுதிய எழுத்துப்போல ............................................

4] வெற்றிடத்துக்குப் பொருத்தமாக எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.

1) இந்த ஆண்டு எங்கள் பாடசாலையில் .................... விழா எமது அதிபரின் தலைமையில் நடைபெற்றது. (பறிசழிப்பு, பரிசளிப்பு, பரிசழிப்பு)
2) வாழ்க்கையில் நாம் முன்னேற .................... செய்யவேண்டும். ( முயற்சி, முயர்ச்சி, முயற்ச்சி, முயட்சி)
3) லூயி பாஸ்டர் ............. யில் ஈடுபட்டாள் (அராச்சி, ஆராட்சி, ஆராய்ச்சி, ஆராட்ச்சி)

5] 1) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

We buy ........................... from the post office. (books, pencils, Stamps, bags)

2) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.



6) கருத்தினைத் தமிழில் எழுதுக.
1) Good Morning ..............................................
2) Please come here ..............................................
3) What is this ..............................................

7) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைப் புள்ளிக்கோட்டின் மீது தமிழில் எழுதுக.



★ 8 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.

8) ஆண்டுக்கு ஒரு தடவை மட்டும் காய்க்கும் பழம்
1) பப்பாசி 2) மரமுந்திரிகை 3) வாழை 4) கொய்யா

9) காற்றின் உதவியுடன் பரவும் தாவரம்
1) புன்னை 2) இருவேரி 3) சீதேவியார் செங்கழுநீர் 4) திப்பிலி


10) தண்டுகோதிப் புழுவினால் தாக்கப்படும் தாவரம்
1) கத்தரி 2) புடோல் 3) குரக்கன் 4) நெல்

11) உருவில் காட்டப்பட்டுள்ள திருகாணியைப் பொருத்தப் பயன்படுத்தக்கூடிய மிகப்பெரிய பொருத்தமான கருவி பின்வருவனவற்றில் எது?



12) அணிந்திருக்கும் உடையில் தீப்பிடித்த ஒருவரை காப்பாற்றுவதற்கு உடனடியாக எடுக்கப்படவேண்டிய மிகப் பொருத்தமான நடவடிக்கை
1) தடித்த துணியினால் போர்த்துதல் 2) நிலத்தில் உருளச் செய்தல்
3) உடையின் தீப்பிடித்த பகுதியைக் கிழித்தெறிதல் 4) வைத்தியரிடம் கொண்டு செல்லுதல்

13) நீரைக் கொண்டுள்ள கண்ணாடிக் குவளையில் சிறிதளவு தேங்காயெண்ணையை இட்டுச் சிறிது நேரத்தின் பின்னர் அவதானிக்கக் கூடியது.



14) அசுத்த நீரை பருகுவதனால் ஏற்படத்தக்க நோய்
1) டெங்கு காய்ச்சல் 2) மலேரியா 3) யானைக்கால் நோய் 4) வாந்திபேதி

15) விவசாயிகள் ஏர் கொண்டு வயலை உழுதனர். இதில் ஏர் என்பது
1) மாடு 2) இயந்திரம் 3) கலப்பை 4) துடுப்பு

16) எதிரி வாலைப்பிடிக்க முயலும்போது தனது வாலைப்பிய்த்துக்கொண்டு செல்வது
1) உடும்பு 2) கபறகொயா 3) பல்லி 4) ஓணான்

17) பருகுவதற்காகப் பால் பைக்கற்றைத் திறப்பதற்கு முன்பாகப் பைக்கற்றில் குறிக்கப்பட்டுள்ள விவரங்களில் மிக முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது
1) காலாவதியாகும் தினம் 2) உற்பத்தி செய்த தினம்
3) உள்ளடக்கப்பட்ட பாலின் அளவு 4) பாலில் அடங்கியுள்ளவை

18) பின்வருவனவற்றில் தேசிய அடையாளங்கள் அல்லாதது எது
1) நீலோற்பவம் 2) நிறைகலசம் 3) நாகமரம் 4) காட்டுக்கோழி

19) கல்லொன்றை இலகுவில் புரட்டுவதற்கு நெம்பு பிடிக்கப்படவேண்டிய மிகச் சரியான முறையைக் காட்டும் படம் எது?




20) மஞ்சள் நிறப்பின்னணியுடன் காணப்படும் இவ்வீதி சமிக்ஞையினால் வெளிப்படுத்துவது யாது?



1) பிள்ளைகள் பாதையைக் கடக்குமிடம் முன்னால்
2) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம் முன்னால்
3) விரைவாக பாதையைக் கடக்கவும்
4) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம்


21) சைக்கிளின் பின்புறச் சேறு தடுப்பானில் சிவப்புநிற (டெயில் லைற்) ஒளித் தெளியி பொருத்தப்பட்டிருப்பதன் காரணம்
1) இரவில் நடந்து செல்பவர்களின் பாதுகாப்பிற்காக
2) இரவில் பாதைக்குக் குறுக்காகச் செல்பவர்களின் பாதுகாப்பிற்காக
3) இரவில் கடந்து செல்லும் பாதசாரிகளுக்குத் தெரியவேண்டும் ஆதலால்
4) இரவில் பின்புறம் வரும் வாகனங்களுக்குத் தெரியவேண்டும் ஆதலால்

22) ஒரு நூலினால் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள காந்தத் துண்டை உரு 1 காட்டுகிறது. கடதாசியினால் சுற்றப்பட்ட யாதாயினும் ஒன்றைக் காந்தத் துண்டிற்கு அண்மையில் கொண்டுசெல்லும்போதுகாந்தத் துண்டு அமைந்திருக்கும் விதத்தை உரு 2 காட்டுகிறது கடதாசியினால் சுற்றப்பட்டிருந்தது.



1) அலுமினியத்துண்டு 2) இரும்புத்துண்டு
3) காந்தத்துண்டு 4) பித்தளைத்துண்டு

23) இரு உலர் மின்கலங்கள் (C), ஒரு மின்குமிழ் (B), ஓர் ஆழி (S) ஆகியன வயர்துண்டுகளின் மூலம் பின்வரும் ஒவ்வொரு விதமாகத் தொடுக்கப்பட்டுள்ளன. ஆழி Sஐ மூடும்போது மின்குமிழ் ஒளிரும் உருயாது?





24) 'வொலிபோல்' (கரப்பந்து) விளையாட்டிற்கான குழு ஒன்றில் உள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 6 2) 7 3) 10 4) 12

25) மாணிக்க கங்கைக்கு அருகில் அமைந்துள்ள சரித்திரப் புகழ் வாய்ந்த நகரம் யாது?
1) சிலாபம் 2) கதிர்காமம் 3) களுத்துறை 4) திருகோணமலை

26) ஆங்கில ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு
1) 1945 2) 1948 3) 1972 4) 1978

27) தெறி ஓட்டையைத் தைக்கும்போது பயன்படுத்தப்படும் தையல் முறையைக் காட்டும் உரு எது?



28) "ஆலையிலே சோலையிலே ஆலங்காட்டிச் சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு"
மேலே தரப்பட்டுள்ள பாடல் எந்த விளையாட்டுடன் தொடர்புபட்டது?
1) எல்லே 2) கிட்டியடித்தல் 3) பம்பரமாட்டல் 4) நீச்சற்போட்டி


கீழே தரப்பட்டுள்ள அடைப்பிற்குள் சில தாவரங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| நன்னாரி | முருங்கை | சீதேவியார் | செங்கழுநீர் | ஆமணக்கு |
| தேங்காய்ப்பூ | கீரை | வேம்பு | கற்றாளை | இருவேரி |

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் ஒவ்வொரு உருவுக்கும் பொருத்தமான பெயர்களைத் தெரிவுசெய்து புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.




29).................. 30).................. 31).................. 32)..................

★ கீழே உள்ள அடைப்பிற்குள் பறவைகள் சிலவற்றின் பெயர் தரப்பட்டுள்ளன

| | | | |
|---|---|---|---|
| பருந்து | கொக்கு | மரங்கொத்தி | சேவல் |
| குக்குறுவான் | வாத்து | மீன்கொத்தி | இரட்டைச் சொண்டுக் குருவி |

ஒவ்வொரு உருவிலும் காட்டப்பட்டுள்ள பாதங்களைக் கொண்ட பறவையின் பெயரை புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.



33).................. 34).................. 35).................. 36)..................

37) ஒரு பிள்ளைக்குத் தினமும் காலையிலும் மாலையிலும் உணவாக மூன்று விசுக்கோத்துகள் வீதம் வழங்கப்படுகின்றன. இதற்காக 72 விசுக்கோத்துகள் அடங்கிய பைக்கற் எத்தனை நாளுக்குப் போதும்?..............................

38) பி.ப. 12.50 இற்குப் புகையிரத நிலையத்திற்கு வந்தடைய இருந்த புகையிரதம் 15 நிமிடம் பிந்தி வருவதாக அறிவிக்கப்பட்டது அவ்வாறெனில் இப் புகையிரதம் வந்தடையும் நேரம் யாது? ..............................

39) 1கிலோகிராம் வாழைப்பழத்தின் விலை 40 ரூபாவாகும். 1 கிலோ 250 கிராம் நிறையுள்ள வாழைப்பழச் சீப்புக்காக எவ்வளவு பணத்தை செலுத்த வேண்டும்? ......................

40) 321 பயிற்சிப் புத்தகங்கள் மூன்று வகுப்புகளுக்குச் சமனாகப் பங்கிடப்பட்டன. ஒரு வகுப்புக்கு எத்தனை புத்தகங்கள் கிடைத்தன?..........................

41) ஒரு குறித்த பாடசாலையின் பிள்ளைகளிடம் அவர்கள் மிகவும் விரும்பும் விளையாட்டுகள் பற்றி விசாரிக்கப்பட்டது. அதன்மூலம் பெறப்பட்ட தகவல்களை இந்த அட்டவணை காட்டுகிறது.

| விளையாட்டு | பிள்ளைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| கிரிக்கெற் | 75 | 57 |
| பட்மின்ரன் | 85 | 104 |
| நெற்போல் | 0 | 139 |
| வொலிபோல் | 90 | 0 |


1) கிரிக்கெட் விளையாட்டை விரும்பும் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
..........................

2) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்களின் மொத்த எண்ணிக்கை யாது?
..........................


3) பட்மின்ரன் விளையாட்டை விரும்பும் பெண்பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது? ..................

4) பிள்ளைகயிடையே மிகவும் பிரசித்திபெற்ற விளையாட்டு யாது?........................

5) ஒவ்வொரு விளையாட்டிலும் விருப்பமுள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் காட்டும் நிரல் வரைபை வரைக. நிரல்களை நிழற்றுக.




42) பின்வரும் மூன்று அடைப்புகளில் புள்ளடிகள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அக்கோலத்திற்கேற்ப அடுத்த அடைப்பில் புள்ளடிகளை வரைக.



43) கூட்டுக 1/4+3/8


44) ஒரு பாத்திரத்தை நிரப்புவதற்கு 5l 540ml கனவளவுள்ள நீர் தேவைப்படுகின்றது. அத்தகைய 4 பாத்திரங்களை நிரப்பத் தேவையான நீரின் கனவளவு யாது?..................

45) உருவில் காட்டப்பட்டுள்ள சென்ரிமீற்றர் அளவிடைக்கேற்ப மாலாவை விட ராஜா எவ்வளவு உயரமானவர்?





................

46)



1cm இடைவெளியில் ஆணிகள் அறைந்துள்ள கேத்திர கணிதப் பலகை உருவில் காட்டப்பட்டுள்ளது ஒரு மெல்லிய றப்பர் பட்டியினால் ஆணிகளை சுற்றி அடைக்கப்பட்டுள்ள வடிவத்தின் பரப்பளவு யாது? ......................

47) கனவுரு வடிவம் உள்ள ஐந்து ஒத்த மரக் குற்றிகளை ஒன்றின் மீது ஒன்று வைத்து அமைத்த வடிவம் உருவில் காணப்படுகின்றது. இவ் உருவின் அடியின் நீளம் 3 cm ஆகும். இதன் உயரம் எவ்வளவு என வெற்றிடத்தில் எழுதுக.




48) பின்வரும் பகுதியை வாசிக்க.

பாடசாலையின் காலைக் கூட்ட ஆரம்பத்தில் அதிபர் பின்வருமாறு கூறினார்.

"இன்று எமக்கு மிகவும் மகிழ்ச்சிகரமான ஒருநாள். எமது பாடசாலையின் மாணவன் ஒருவன் சர்வதேச ஓவியப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமையைத் தேடித்தந்துள்ளான். அவனுக்கு உரிய பரிசைப் பெற்றுக்கொள்வதற்காக ஜப்பான் நாட்டுக்கு வருமாறு அழைப்பும் வந்துள்ளது" அதிபர் இவ்வாறு கூறியபோது மிகவும் அமைதி நிலவியது. மேலும் தமது உரையை தொடர்ந்தும் அவர் இவ்வாறு கூறினார்.

ஐந்தாந்தரத்தில் கல்வி கற்கும் அவ் அதிஷ்டக் குழந்தைதான் கண்ணன். பாடசாலை சார்பாக நான் அவனுக்கு வாழ்த்துக் கூறுகிறேன். இப்போது நான் அந்தப் பெருமைக்குரிய மாணவனை முன்னால் வருமாறு அழைக்கின்றேன். அமைதியைக் கலைத்துக்கொண்டு அனைவரும் கைதட்டல்களை வழங்கினர்.

நீர்தான் கண்ணன் எனின் இச்சந்தர்ப்பத்தில் உமக்கு ஏற்படும் உணர்வுகளை வெளிக்காட்டும் ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்களை எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெறல் வேண்டும். இவ்வாக்கியங்களின் எழுவாய் பயனிலை தொடர்பு நிரந்தரமாக இருத்தல் வேண்டும்)

1)..........................................................................................
2)..........................................................................................
3)..........................................................................................
4)..........................................................................................
5)..........................................................................................
6)..........................................................................................

## வவுனியாவில் ஆலய பூசகர் சுட்டுக்கொலை

வவுனியாவில் ஆலயப் பூசகர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீநகர் பகுதியில் உள்ள அம்மன் கோவில் ஒன்றின் பூசகரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். ஜெகநாதன் ஐயர் என அழைக்கப்படும் 40 வயதான குடும்பஸ்தரே கொல்லபட்டவராவார்.

சூட்டுக் காயங்களுடன் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட இவர் பின்னர் உயிரிழந்தார் என்று வவுனியா வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## இடைக்குறிச்சிக்கு மீண்டும் மின்சாரம்

இடைக்குறிச்சி கிழக்குப் பகுதிக்கு கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் இப்பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்களால் மின்மார்க்கமும் பழுதடைந்திருந்தமையால் மின்விநியோகம் தடைப்பட்டிருந்தது. (202-122)

## மணற்காட்டில் சவுக்கு மரங்கள் அழிப்பு

மணற்காட்டுப் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையிலான சவுக்குமரங்கள் விறகுக்காக வெட்டப்படுகின்றன என பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்தின் வளத்தைப் பேணுவதற்காக கடந்த காலங்களில் பெருமளவான சவுக்குக் கன்றுகள் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தன.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்தி - எந்த விதக் கட்டுப்பாடுமின்றி - பெருமளவான மரங்கள் தறிக்கப்படுகின்றன.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் இச்செயற்பாட்டை கட்டுப்படுத்த உதவி அரச அதிபரும், வன, வள பாதுகாப்பு திணைக்களத்தினரும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202)

1st In.Com, G.A.Q.
பேராதனை, யாழ்.பல்கலைக்கழகம் (வெளிவாரி)
✱ கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
✱ பேராதனை பல்கலைக்கழகப் பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
✱ புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் யாவும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
விவரங்களுக்கு: S.அருள்நங்கை நிர்வாகி.
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P. : 222 8148, 222 3208
(54623)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
க.பொ.த. (உயர்தர) பரீட்சை (2005)
பெறுபேறுகளில் தொடர்ந்து முன்னணி வகித்துக் கொண்டிருக்கும் எமது கல்லூரி மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
(54625)

45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
இராமலிங்கம் பஞ்சாட்சரம்
எமது சக உத்தியோகத்தரின் ஆத்மாசாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
பொறுப்பதிகாரியும் சக உத்தியோகத்தர்களும்
போ.சு.போ.பிரிவு, யாழ்.மாநகர சபை
(54621)

கண்ணீர் அஞ்சலி
எமது சக தோழர் திரு. ச.சுசீலன்
(நல்லூர் ப.நோ.கூ.சங்க காவலாளி)
அவர்களின் அன்புத் தாய்
திருமதி சர்வானந்தன் பவளக்கொடி
அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.
கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம், கிளை - நல்லூர்.ப.நோ.கூ.சங்கம்.
(54622)

22ஆவது ஆண்டு நினைவு நாள்
அன்னையின் மடியில்
19 - 04 - 1972



ஆண்டவன் அணைப்பில்
25 - 10 - 1984
செல்வி நிமாலினி வீரசிங்கம்
(பாப்பா)
திதி : 25.10.2006
எங்கள் அன்பு மகளே! ஒரு கொடிய அரக்கனின் கார் விபத்தில் பலியாகி இன்றுடன் 22ஆண்டுகள், என் அன்னமே நீ எங்களுடன் இருந்திருந்தால் உன் அன்பு மழலைச் செல்வங்களையும் அள்ளி அணைத்திருப்போம், எம் மன வேதனையை உன்னிடம் தான் சொல்லமுடியும், நான் உறங்கும் பொழுதும் நீ அம்மா என்று அழைப்பது கேட்கிறது - என் செல்வமே நீ சென்ற இடத்திற்கு ஒரு நாள் நானும் வருவேன் அப்பொழுது என் வேதனைகள் கண்ணீர் எல்லாமே அடங்கிவிடும்.
அன்பு நினைவுகளுடன்
அப்பா, அம்மா, சகோதரர்கள், மற்றும் உறவினர்கள்.
34/1, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
(54806)

ICT Information & Communication Technology
Grade - (10-11) UNIT-04
தரம் 10 மாணவர்களுக்கு அலகு-04 இற்கான தமிழ் மொழி மூலமான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன!
Days :- Sat, Sun,
C.B Computer Academy
Station Road, Kondavil.

கிருஷ்ணா திருமண சேவை
பதிவு இல: (K.V.D 404)
பாரதிதாசன் வாசிகசாலை, மேல்மாடி, அல்வாய் கிழக்கு, அல்வாய்
வடமராட்சி இந்து, செவ்.குற்றம், குற்றமில்லாத பொறியியலாளர், பட்டதாரி மணமகன்/மணமகள், வெளிநாட்டு மணமகன்/வெளிநாட்டில் சிற்றிசன் மணமகள்/Australiaவில் டொக்டர். ஆண்டு 69இல் பிறந்த B.Sc.,M.Sc சிவந்த நிறமுடைய ஆசிரியைக்கு டொக்டர், பொறியியலாளர், கணக்காளர் தேவை.
நேரடி தொடர்பு விரும்பத்தக்கது. தரகர்கள் தேவையில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தென்னிலங்கை உடன்பாடு குறித்து தமிழர்கள் மகிழ எதுவுமே இல்லை

இலங்கைத் தீவின் இரு பெரும் சிங்களக் கட்சிகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்பாடு ஒன்றில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திட்டிருக்கின்றன.

சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத பெரும் அரசியல் திருப்பம் என்று தென்னிலங்கை விமர்சகர்கள் மெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார்கள்.

இலங்கைத் தீவை ஆட்டிப் படைக்கும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பொன்னான வாய்ப்பு இந்த உடன்பாட்டின் மூலம் எட்டப்பட்டிருப்பதாக இலங்கையில் மட்டுமல்லாமல் சர்வதேச மட்டத்திலும் பெரும் புளகாங்கிதம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பெரிய முட்டுக்கட்டை, ஓர் உடன்பாடு ஒப்பமிடப்பட்டதோடு நீங்கிவிட்டது என்பது போன்று ஆய்வாளர்கள் பெருமூச்சு விடுகின்றார்கள்.

ஆனால், இந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட விதத்தையும், அதன் வடிவத்தையும், அது இடம்பெற்ற காலகட்டத்தையும் - இவை எல்லாவற்றையும் தாண்டி கடந்த கால தென்னிலங்கை அரசியல் வரலாற்றையும் - நோக்கும், ஈழத் தமிழர்களுக்கு தென்னிலங்கையில் ஏற்பட்ட இந்த இணக்கம், மகிழ்ச்சி தருவதாக இல்லை. தமக்கு எதிரான ஏதோ ஒரு சூழ்ச்சிப் பொறியின் பூர்வாங்க நகர்வாகவோ- அரசியல் காய் நகர்த்தலாகவோ - இந்த நடவடிக்கை அவர்களுக்குப் படுகின்றது; தோன்றுகின்றது.

தேசிய இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு ஒன்றைக் காணும் விவகாரத்தில் ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கும், தென்னிலங்கை அரசியல் பீடங்களின் விட்டுக் கொடுக்கும் சிந்தனைப் போக்கின் எல்லைகளுக்கும் இடையில் இட்டு நிரப்ப முடியாத இசைவற்ற இடைவெளியும், இணங்காத முரண்பாடுகளும் இருப்பதை சர்வதேசமும் அறியும்.

அதேபோன்று, இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் தொடர்பான கருத்து நிலைப்பாட்டில் தென்னிலங்கைச் சிங்களத்தின் இரண்டு பெரிய கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில்கூட கடந்த ஜனாதிபதித் தேர்தல் வரையான காலத்தில், மலைக்கும் மடுவுக்கும் உள்ளது போன்ற பெரிய வேறுபாடு நிலவி வந்தமை பரகசியம்.

சமஷ்டி அடிப்படையில் தீர்வு என்று எழுத்து மூலம் ஒப்புக் கொள்ளும் நிலைவரை எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க இறங்கி வந்திருந்தார். எனினும், இப்போது 'இந்திய ஆட்சி வடிவத்திலான தீர்வு' என்று 'சுருதி' இறக்கி - மாற்றி - அவர் வாசிப்பது சிங்களப் பேரினவாதத் தலைவர்களின் காலாதிகால அரசியல் குத்துக்கரணத்தின் வழி வந்த செயற்பாடுதான்.

ஆனால், மறுதரப்பில் மஹிந்த ராஜபக்ஷவோ தமிழர்களின் தனியான தாயகம், சுயநிர்ணய உரிமை போன்ற நிதர்சனமான கோட்பாடுகளையோ, சமஷ்டி முறைத் தீர்வு போன்ற நியாயமான எண்ணக் கருவையோ அடியோடு நிராகரித்து நின்றார்; நிற்கிறார். ஐக்கிய இலங்கைக்குள் ஒற்றையாட்சி முறையின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் மூலமான தீர்வு என்ற உப்புச் சப்பற்ற - தமிழர்கள் பரிசீலனைக்குக்கூட எடுக்கத் தகுதியற்ற - கொள்கைப் போக்கை அவர் வலியுறுத்தி வருகிறார்.

இந்த இருவரும் தேசிய இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு காண்பது உட்பட நாட்டின் பிரதான பிரச்சினைகளை கருத்தொருமைப்பாட்டுடன் அணுகுவது என்ற உடன்பாட்டுக்கு இப்போது வந்திருக்கின்றார்களாம். அந்த உடன்பாட்டைத் தலையில் தூக்கிவைத்து, மிகப் பெரிய சாதனை என்று கூத்தாடுகின்றது தென்னிலங்கை.

தாம் தேசிய இனப்பிரச்சினைக்கு எந்தக் கொள்கைக் கோட்பாட்டின் அடிப்படையிலான தீர்வைத் தரப் போகின்றார்கள் என்பதில் இரு தலைவர்களும், அவர்களது கட்சியினரும் இன்னும் இணக்கம் காணவில்லை.

இதுவரை, இரு தரப்பினரும் தீர்வுக்கான வழி குறித்து வெளிப்படுத்தி வந்த கருத்துகள் மலைக்கும், மடுவுக்குமான இடைவெளியாகக் காணப்பட -

அதை இட்டு நிரப்பி சமப்படுத்தும் யோசனைத் திட்டத்தை இருவரும் முன்வைக்காத நிலையில் - அதற்கான கோட்பாட்டு அல்லது சித்தாந்த இணக்கப்பாட்டைத் தென்னிலங்கைத் தலைவர்கள் இருவரும் எட்ட முன்னர் -

அரசியல் சுயலாப நோக்கில் கருத்தொருமைப்பாட்டுடன் செயற்படத் தயார் என இருவரும் கண்ட இணக்கத்தை, தூக்கிப் பிடித்துப் பெரும் பெறுபேற்றுச் சாதனையாக விவரிக்க முற்படுகிறது தென்னிலங்கை.

ஈழத் தமிழர்கள் வாக்களிக்கத் தவறிய காரணத்தால் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றோம் என்ற விசனம் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு.

தேர்தலில் வென்று ஜனாதிபதிப் பதவியை எட்டினாலும், தனது பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்கப் போக்கைத் தமிழர்கள் மீது செலுத்தி, அதை நிலை நிறுத்தும் நோக்கின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட தமது இராணுவ நகர்வுத் திட்டங்களை முறியடித்துத் தமது எதேச்சாதிகார எத்தனத்துக்கு, சரியான பதிலடி கொடுத்துத் தமது முகத்தில் கரி பூசியதால் புலிகள் மீது சீற்றம் ஜனாதிபதி மஹிந்தருக்கு.

இவ்வாறு இரு தரப்பு எரிச்சலும், சீற்றமும், விசனமும் பொது எதிரிக்கு எதிராக இருப்பதால் அரசியல் துருவங்கள் இணைய முன்வந்திருக்கின்றன. அதுதான் நிஜம். அதன் விளைவே கருத்தொருமைப்பாட்டுடன் செயலாற்றுவதற்காக என்று தெரிவித்து இரண்டு பெரிய கட்சிகளும் செய்து கொண்ட இந்த உடன்பாடு.

தவிரவும், தமது அன்றாட அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான தேவைப்பாடும் இந்த உடன்பாட்டுத் திட்டத்தை நோக்கி இரு தலைவர்களையும் நெட்டித் தள்ளியுள்ளது என்பதை கொழும்பு அரசியலை நோக்கும் அனைவரும் ஒப்புக் கொள்வர்.

ஆகவே, இந்த நோக்கங்களின் அடிப்படையில் செய்யப்பட்ட இந்த உடன்பாடு, தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காண்பதற்கான பெரும் வாய்ப்பைத் தந்து விடும் என்று நம்புவதற்குத் தமிழர்கள் தயாரில்லை.

தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்கின்ற -

தமிழர்களின் தனித்துவம், தாயகம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரிக்கின்ற -

ஒரு நீதியான தீர்வுத் திட்டத்தின் வரையறைகளை அடையாளம் கண்டு, அதனடிப்படையிலான தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கு பெரிய இரண்டு சிங்களக் கட்சிகளும் கொள்கை அளவில் இணக்கத்துக்கு வருமானால் -

அந்த உடன்பாட்டை வரவேற்பதற்குத் தமிழர்கள் தயார்.

அதை விடுத்து, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து தெளிவான வரையறைகளை வெளிப்படுத்தாத ஓர் இணக்கப்பாட்டுக்குள் இரு பிரதான சிங்களக் கட்சிகளும் நுழைவது, தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தருவதாக அமையும் என்று நம்பி ஏமாறுவதற்கு - அதுவும் இவ்வளவு நீண்ட அரசியல் அனுபவங்களுக்கும், பட்டறிவுகளுக்கும் பின்னர் ஏமாறுவதற்கு - தமிழர்கள் அப்படி ஒன்றும் வடிகட்டின முட்டாள்கள் அல்லர்.

# ஊரடங்கை நீக்க முன்னரே கிளைகள் முன் மக்கள் கியூவில்

யாழ்ப்பாணம்,ஒக்.25

குடாநாட்டிலுள்ள ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக ஊரடங்கு தளர்த்தப்படுவதற்கு முன்னரே மக்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்கின்றனர்.

தற்போது அத்தியாவசியப் பொருள்களுக்கு குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

தனியார் கடைகளில் அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவது என்பது குதிரைக் கொம்பாகவே உள்ளது.

இந்நிலையில் ப.நோ.கூ. சங்கக் கிளைகளூடாகப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் முண்டியடிக்கின்றனர்.

கொட்டும் மழையைக் கூடபொருட்படுத்தாது பொருள்களைப் பெற்றுக் கொள்வதிலேயே மக்கள் குறிப்பாக உள்ளனர்.

பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் வயது வேறுபாடு இன்றி ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் நிற்பதைக் காணமுடிகிறது.

சங்கக் கிளைகள் காலை 9 மணிக்கே திறக்கப்படுகின்றன. ஆனால், மக்கள் ஊரடங்கு தளர்த்தப்படுவதற்கு முன்னரே கடைகளின் முன்னால் வரிசை கட்டுகின்றனர். (203-68-79)

# கமநல சேவைகள் ஆணையாளராக நியமனம்

வடமராட்சி கிழக்கு,ஒக்.25

கமநல சேவைத் திணைக்களத்தின் யாழ்மாவட்ட புதிய உதவி ஆணையாளராக பற்றிக் ரஞ்சன் அண்மையில் நியமனம் பெற்றுள்ளார்.

முன்னாள் ஆணையாளர் க.சுந்தரேசன் இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (202-122)

# தேசிய கல்வியியல் கல்லூரியின் இறுதிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ்.தேசிய கல்வியல் கல்லூரியின் முதலாம், இரண்டாம் வருட மூகிழ் நிலை ஆசிரியர்களுக்கான ஆண்டு இறுதிப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவு எதிர்வரும் 4ஆம் திகதி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அன்றைய தினம் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார். (1-202)

# செம்மணிப் பகுதியில் ஒரு வாரத்தில் ஐந்து இளைஞர்களைக் காணவில்லை

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

செம்மணிப் பகுதியில் கடந்த வாரத்திலிருந்து 5 இளைஞர்கள் காணாமற் போயுள்ளனர் என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி துரைராஜா சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சிக்குச் செல்லும் யாழ். வரவேற்கிறது பிரதேசத்தில் அமைந்துள்ள செம்மணிப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து 5 இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்டதாகவும் -

இதுவரை எவ்வித தகவல்களும் தமக்கு கிடைக்கவில்லை என அவர்களது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

புவிராஜா ஸ்ரீசுந்தரராஜா அவருடன் சென்ற மரியதாஸ், றொம்சன் மௌசக், கருணதாஸ் ஆகிய இளைஞர்கள் கடந்த வாரத்தில் இருந்து காணாமற் போயிருக்கிறார்கள் என யாழ். மனித உரிமை ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வெண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது. (1-79)

# யாழ்.ப.நோ.கூ. சங்கத்தின் இரு கிளைகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஒக.25

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நீராவியடி 16ஆம் இலக்கக் கிளை பாதுகாப்புக் காரணங்களுக்காக, சங்கத்தின் தலைமைச் செயலகக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அதேபோன்று நாச்சிமார் கோயிலடியிலுள்ள 5ஏ கிளை மூடப்பட்டு, தட்டா தெருச் சந்திக் கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை சங்கத்தின் பதில் தலைவர் எஸ்.கணநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

மேற்படி கிளைகள் இடம் மாற்றப்பட்டுள்ளதன் காரணம் குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

நீராவியடி 16ஆம் இலக்கக் கிளை இரண்டு தடவைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருட்டுப் போயுள்ளன. அதனால் அக்கிளையை சங்கத்தின் தலைமைச் செயலகக் கட்டடத்திற்கு மாற்றியுள்ளோம்.

பாதுகாப்பான ஒரு கட்டடத்தை உரிய கிளைக் குழுவினர் பெற்றுத் தந்தால் மீண்டும் பழைய இடத்தில் கிளையை இயக்க முடியும்.

5ஏ கிளை இயங்கிய கட்டடத்தை உரிமையாளர் தருமாறு கோரியதாலேயே அக் கிளையை மூடினோம். இந்தக் கிளை தட்டாதெருவில் உள்ள கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கிராம சேவையாளர்கள், பிரதேச செயலர்கள் கோரும் சந்தர்ப்பத்தில் மக்களுக்கு வசதியான ஏனைய கிளைகளில் வைத்து பொருள்களை விநியோகிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (1-202-68-79)

# தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சை இன்று இல்லை

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு தற்போது நடைபெற்று வரும் இறுதிப் பரீட்சையில் இன்று நடைபெறவிருந்த பாடங்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளன என தொழில்நுட்பக் கல்லூரி அதிபரும் பிரதி பிராந்தியப் பணிப்பாளருமான ந.ஜோகராஜன் தெரிவித்துள்ளார்.

19 ஆம் திகதி நடைபெறவிருந்த பாடங்களும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டிருந்தன.

இதேவேளை -

2006 ஆம் ஆண்டுக்குரிய இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சை பகுதியினரால் கோரப்பட்டுள்ளன.

தற்சமயம் நடைபெற்றுவரும் இறுதிப் பரீட்சையில் தோற்றும் சகல மாணவர்களையும் 2006 ஆம் ஆண்டிற்கான பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

தற்போது நடைபெறும் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடையத் தவறும் பட்சத்தில் அடுத்த பரீட்சைக்குத் தோற்றுவதற்காக ஒரு வருடம் காத்திருக்கும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டே விண்ணப்பிக்குமாறு கோரியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (1-202-88)

## திருட்டுச் சம்பவத்தின் பின்னர்

# கிணற்றில் வீழ்ந்தவரின் சடலம் நேற்று இனங்காணப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ்.கஸ்தூரியார் வீதியில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களை அடுத்து தப்பி ஓடியவேளை கிணற்றில் வீழ்ந்து மரணமானவரின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

உயிரிழந்தவர் தொடர்பாக முரணான தகவல்கள் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜாவால் நடத்தப்பட்ட விசேட விசாரணையின் பின் சடலம் இனங்காணப்பட்டுள்ளது.

பிரஸ்தாப சடலத்தைப் பரிசோதனை செய்த சட்ட வைத்திய அதிகாரி நேற்றுத் தமது பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

பிரஸ்தாப நபர் கடந்த ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி செட்டித் தெருவில் வைத்துச் சுடப்பட்டார். அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்.

அவரது தோள்பட்டையில் 9 மி.மீ. துப்பாக்கியின் ரவைத் துண்டு ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது.

அதை சத்திரசிகிச்சை மூலம் அகற்ற முன் அவர் வைத்தியசாலையில் இருந்து தப்பிவிட்டார்.

சடலத்தில் அதேயிடத்தில் அந்த ரவையின் துண்டு இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த செல்வன் சஞ்சீவன் என்பவரின் சடலம் இது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து பிரஸ்தாப சடலத்தை அவரது தாயாரிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

**நாளை**

ஐப்பசி 09
வியாழக்கிழமை
26.10.2006
திதி : சதுர்த்தி
பிற்பகல் : 2.27
நட்சத்திரம் : கேட்டை
முன்னிரவு : 08.47
சுபநேரம் : 07.33 - 09.03
ராகுகாலம் : 01.33 - 03.03

# குடாநாட்டில் மீண்டும் பாணுக்குத்தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.25

குடாநாட்டில் மீண்டும் பாணுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மல்லாகம், தெல்லிப்பழை, சுன்னாகம், கல்வியங்காடு, முத்திரைசந்தை, நல்லூர், இருபாலை, நீர்வேலி, அச்செழு, குருநகர் பகுதிகளில் இந்நிலமை அதிகமாகக் காணப்படுகின்றது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதும் மக்கள் பேக்கரிகளின் முன் நீண்ட வரிசையில் காத்து நிற்கின்றனர்.

சில பேக்கரிகளில் இரண்டு இறாத்தல் பாணும் சில இடங்களில் ஒரு இறாத்தல் பாணும் வழங்கப்பட்டு வருகின்றன.

பெரு மழை ஆரம்பித்துள்ளதால் வீடுகளில் விறகுத் தட்டுப்பாடும் காணப்படுகின்றமையால் காலை, மாலை உணவுக்கு பாணை நாடும் மக்களின் எண்ணிக்கை முன்னரை விட அதிகரித்துள்ளது.

இதனைச் சாதகமாக்கும் சில வர்த்தகர்கள் பேக்கரிகளால் வழங்கப்படும் பாணை 30 ரூபா விலைக்கு விற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (1-79-68-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலாங்கொடை கொள்ளைச் சம்பவம் இராணுவத்திலிருந்து ஓடியவர்களின் வேலை

## அமைச்சர் சந்திரசேகரன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 25

அம்பலாங்கொடைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுக்கு இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களே காரணமென அமைச்சர் சந்திரசேகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு, சந்திரசேகரன் எழுதிய கடிதத் தில் தெரிவித்திருப்பதாவது:-

அம்பலாங்கொடையில் தமிழர்களுக்குச் சொந்தமான நகைக்கடை ஒன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துக்கு இராணுவத்தில் இருந்து விலகிய ஆயுததாரிகளே காரணம், நகைக்கடையில் இருந்த விற்பனையாளர்களும், வாடிக்கையாளர்களும் இந்த ஆயுததாரிகளால் தாக்கப்பட்டனர். மேலும் அம்பலாங்கொடைப் பகுதி படையினரின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கின்றது - என்று சந்திரசேகரன் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை:-

இந்தக் கொள்ளைச்சம்பவம் தொடர்பாக இப்பகுதி தமிழ் மக்கள் மலையக மக்கள் முன்னணிக்கு அழுத்தம் கொடுத்ததையடுத்து, நாம் இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதும் அவர்கள் இது வரையும் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் அமைச்சர் சந்திரசேகரன் குற்றஞ்சாட்டியுள்ளார். (ஐ)

# 5 முஸ்லிம்கள் மன்னாரில் கைது

மன்னாரில் முஸ்லிம்கள் மூவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எருக்கலம்பிட்டிப் பிரதேசத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மூன்று முஸ்லிம்களே தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எரிபொருள்களை எடுத்துச் சென்றனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மூவரும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 210 லீற்றர் டீசல், இரண்டு கண்ணாடியிழைப் படகுகள் மற்றும் ட்ரக் வாகனம் ஆகியவை கைப்பற்றப்பட்டன என்று கடற்படையினர் தெரிவித்தனர் என்று மன்னார் பொலிஸார் கூறியுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள மூவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# இந்திய இராணுவ அதிகாரிகள் சரத் பொன்சேகாவை சந்தித்தனர்

கொழும்பு, ஒக். 25

இந்திய இராணுவத்தின் பயிற்சித் துறை இயக்குநர் மேஜர் ஜெனரல் வி.கே. அலுவாலியா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. இந்திய இராணுவ அதிகாரிகளான கேணல் பங்கஜ் சக்சேனா, லெப். கேணல் எஸ்.சி. ரானா ஆகியோரும் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

''இரு நாடுகளின் பாதுகாப்பு தொடர்பிலான விடயங்களை சரத் பொன்சேகா மற்றும் இந்திய இராணுவ அதிகாரிகள் விவாதித்தனர்'' என்று இராணுவத்தின் செய்திக்குறிப்பு தெரிவித்தது. (ஐ)



குடாநாட்டுக்கான பொருள்களை ஏற்றிவந்த விமானத்தில் இருந்து பொருள்கள் பலாலியில் இறக்கப்படும் போது எடுக்கப்பட்ட படம். (படம்: ஊடக தகவல் நிலையம்)

# தமிழ் பத்திரிகைப் பிரதிகள் மட்டக்களப்பில் தீக்கிரை!

செங்கலடி, ஒக். 25

கொழும்பில் வெளியாகும் தமிழ் பத்திரிகை ஒன்றின் பிரதிகள் நேற்றுமுன்தினம் அதிகாலை மட்டக்களப்பில் இனந் தெரியாத நபர்களால் அபகரிக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

விநியோகத்துக்காக வாகனம் ஒன்றில் எடுத்துவரப்பட்ட பத்திரிகைப் பிரதிகளே தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பு சுங்கான் கேணிக்கும் முறக்கொட்டாஞ்சேனைக்கும் இடையே விநியோக வானை வழிமறித்த அடையாளம் தெரியாத ஆயுதபாணிகள் பத்திரிகைக்கட்டுகளை வெளியே எடுத்து தீமூட்டி எரித்தனர் என்றும் விநியோக வானையும் எரிக்க முயன்றனர் எனவும் கூறப்படுகிறது.

வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பகுதிகளில் உள்ள முகவர்களுக்கு பத்திரிகைகளை வழங்கிவிட்டு விநியோக வாகனம் மட்டக்களப்பு நோக்கி வந்துகொண்டிருந்த சமயத்திலேயே வழியில் ஆயுதபாணிகளால் வழி மறிக்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகைக் கட்டுக்களை ஏற்றி வந்த வானையும் அக்குழுவினர் தீயிட முயன்றனர். எனினும் அது வாடகை வாகனம் என்று கூறி மன்றாடியதை அடுத்து அதனைச் செல்ல அனுமதித்தனர் என்றும் கூறப்பட்டது.

கொழும்பில் வெளியாகும் தமிழ் பத்திரிகைகளை கிழக்கில் விநியோகிப்பதை ஆயுதக் குழு ஒன்று அச்சுறுத்தி தடை செய்து வருவது தெரிந்ததே. (ஐ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது. இன்றைய ஹர்த்தாலுக்கான முழு ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். அமைதியான முறையில் ஹர்த்தாலுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ் பேசும் மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (111-68)

## நவிண்டிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் காயமடைந்த திஸ்ஸ குணரட்ண (வயது-36) என்ற சிப்பாய், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் அங்கிருந்து இராணுவ அம்புலன்ஸ் வாகனத்தில் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த பகுதி இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது. (1-155-115-203)

## சர்வதேச சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மைதானத்தில் இருந்து விமானப்படை ஹெலிகொப்டரில் புறப்படுவதற்கு முன்பாக தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

''எங்களுடைய பேச்சுக் குழு, முழுப் பாதுகாப்புடன் பயணிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று நோர்வே உறுதிமொழி அளித்துள்ளது. நோர்வேத் தூதுவர் எங்களை அழைத்துச் செல்கிறார்.

கொழும்பிலும் இணைத் தலைமை நாடுகளைக் கொண்ட பிரதிநிதிகளால் எங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று உறுதியளிக்கப்பட்ட பின்னரே எமது பயணத்தைத் தொடங்கியுள்ளோம்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல், சரியாகத் தீர்மானிக்கப்படவில்லை. எமது மக்கள் மீதான அரச பயங்கரவாதம், இனப் படுகொலைகள், பொருளாதாரத் தடைகள், போக்குவரத்துத் தடைகள் ஆகியவற்றை ஸ்ரீலங்கா அரசு ஏற்படுத்தி பெரும் மனித அவலத்தை உருவாக்கியுள்ளது.

எமது மக்களுடைய மனிதாபிமானப் பிரச்சினைதான், இப்பேச்சுகளின் முக்கிய மான இடமாக இருக்கும்.

மக்களுக்கான மனிதாபிமானப் பிரச்சினைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கின்ற அடக்குமுறைகள் மற்றும் தடைகள் நீக்கப்பட்டு, படுகொலைகள் நிறுத்தப்பட்டு எமது மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற விடயம் இப்பேச்சுகளில் பிரதானமாக விவாதிக்கப்படும்.

மேலும், சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே அமைதி முயற்சிகளை முன்னகர்த்திச் செல்லச் சாத்தியமான சூழல் உருவாகும். இதுதான், ஜெனிவாப் பேச்சில் எமது வலியுறுத்தலாக இருக்கும்.

இத்தகைய பேச்சுகளில் சிறிதளவு நம்பிக்கைகூட இல்லாமல் தான் நாம் பயணத்தை மேற்கொள்கின்றோம். சர்வதேச சமூகத்தின் அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து எமது தலைவர் இப்பேச்சுக்கு இணங்கியிருந்தார். எமது தலைவரின் அறிவுறுத்தலுக்கும், பணிப்புக்கும் அமையத்தான் நாம் பேச்சுக்குச் செல்கின்றோம். எங்களுடைய நிலைப்பாட்டை பேச்சுகளில் ஆணித்தரமாக முன்வைப்போம்.

ஸ்ரீலங்கா அரசு தீர்வைத் தரும். மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நல்லெண்ண வெளிப்பாட்டைக் காட்டும் என்பதில் துளிகூட நம்பிக்கையில்லை. இருப்பினும், சர்வதேச சமூகத்தினுடைய அழைப்பையேற்றுத்தான் பேச்சக்குச் செல்கின்றோம்.

### நோர்வேக்கும் செல்வோம்

பேச்சுகளை நிறைவு செய்து கொண்டு அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வே நாட்டுக்கும் சென்று, அங்குள்ள உயர் நிலைத் தலைவர்களைச் சந்தித்து எமது தாயகத்தின் நிலைப்பாட்டை விரிவாக எடுத்து விளக்கவுள்ளோம்''

இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

## விருகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். கஜேந்திரன், கி.சிவநேசன் ஆகியோர் விடுத்த அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உணவகங்கள், வர்த்தக நிலையங்கள், மருந்தகங்கள், வியாபார நடவடிக்கைகள், போக்குவரத்து சேவைகள், பாடசாலைகள், உயர்கல்வி நிலையங்கள் அனைத்தையும் மூடி பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (அ-1)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

புலிகளின் பேச்சுக் குழுவினரை கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்கு ஏற்றிச் செல்வதற்காக அரச விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்று நேற்றுக் காலை 10 மணியளவில் கிளிநொச்சி மைதானத்தில் இறங்கியது. கொழும்புக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், புலிகளின் குழுவை அழைத்துச் செல்வதற்காக அந்த ஹெலிகொப்டரில் கிளிநொச்சிக்கு வந்திருந்தார்.

புலிகளின் குழுவினரை வழியனுப்புவதற்காகப் போராளிகள், பொறுப்பாளர்கள் உட்படப் பலர் கிளிநொச்சி மைதானத்தில் திரண்டிருந்தனர்.

ஜெனிவா செல்லும் புலிகளின் குழுவினரது பயணத்துக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை நோர்வே வழங்கியிருந்தது. அத்துடன், கிளிநொச்சியில் இருந்து கொழும்பு சென்று பின்னர் அங்கிருந்து விமானத்தில் புலிகளின் குழுவினர் பயணம் செய்வதற்கான பயணப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் கொழும்பில் உள்ள இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளும் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று பகல் கொழும்பில் உல்லாச விடுதி ஒன்றில் பலத்த பாதுகாப்புடன் தங்கி இருந்த புலிகளின் பேச்சுக் குழுவினர், பெரும்பாலும் இன்று காலை 9 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக ஜெனிவா நோக்கிப் புறப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவாவில் எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் பேச்சுக்களை முடித்துக் கொண்ட புலிகளின் குழுவினர் நோர்வேக்கு விஜயம் செய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## யாழ்ப்பாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தால் அங்கு மக்கள் இராணுவத்தினருக்கு எதிராகக் கலகம் செய்யும் நிலை உருவாகலாம் என்று கொழும்பு ஆங்கில வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளி விவகார அமைச்சின் செயலாளர் எச்.எம்.எம். பலிக்ககார, அரச சமாதான செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித்த கொஹொன்ன, மத்திய வங்கித் தலைவர் அஜித் நிவாஸ் கப்ரால், முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஜனாதிபதி சட்டத்தரணிகளான கோமின் தயாசிறி, எச்.எல்.டி. சில்வா ஆகியோரும் அரச குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ள அரசுக் குழுவினருக்கு கடந்த சனி, ஞாயிறு தினங்களில் ஜனாதிபதி செயலகத்தில் முன் ஆயத்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

இதேவேளை:-

ஜெனிவாப் பேச்சுக்குச் செல்லும் இலங்கை அரசுக் குழுவும், விடுதலைப் புலிகளும் கடந்த முறை ஜெனிவாவில் ஒரேயிடத்திலேயே தங்கியிருந்தனர். எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக இம்முறை இரு தரப்பினரும் வெவ்வேறு ஹொட்டல்களில் தங்கவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுகள் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் ஜெனிவா மாநாட்டு நிலையத்திலேயே நடைபெறவுள்ளன.

இந்த மாநாட்டு நிலையத்திற்கு இரு குழுக்களும் விசேட பஸ்களில் அழைத்துச் செல்லப்பட உள்ளன. அரச தூதுக் குழு முழுமையாகக் கலந்துகொள்ளும் எனவும் அதில் மாற்றமிராது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுகளுக்கு நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தலைமை வகிப்பார். (ஐ)

Diploma in Auto CAD
(With Manual Drawing)
MCS
324, Palaly Road, Jaffna

DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN ACCOUNTING PACKAGES
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN AutoCAD
Start On :- 28.10.2006
Note :- வகுப்புக்கள் யாவும் கீழுள்ள புதிய முகவரியில் நடைபெறும்.
Softview Computer College
No. 55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.